# IntSym 2015




## 5th International Symposium - 2015

### South Eastern University of Sri Lanka

**Emerging Trends and Challenges in Multidisciplinary Research**

ISBN 978-955-627-063-1

07th and 08th December 2015

# அறிவாராட்சியியலில் நியாயவாதத்தினதும், அனுபவவாதத்தினதும் ஒருங்கிணைந்த பரிமாணம்: இமானுவெல் கான்டின் அறிவாராட்சியியல் - ஓர் பகுப்பாய்வு

**Sivakumar. Nirosan**

Assistant Lecturer, Dept of Philosophy, Faculty of Arts, University of Jaffna.
ssnirosan@yahoo.com

**ABSTRACT:** நவீன காலத்தில் நிலவிய அறிவாராட்சியலின் நியாயவாதம், அனுபவவாதம் எனும் இரு பெரும்பாரம்பரியங்களை கான்டினுடைய சிந்தனைகள் ஒருங்கிணைத்த தன்மையினையும், அவை சமகால மெய்யியலில் ஏற்படுத்திய தாக்கங்களையும் மதிப்பீடு செய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது. உண்மை அறிவு எவ்வாறு எழுகின்றது எனும் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட ஒரு கொள்கைகள் (அறிவுமுதல் வாதம், அனுபவமுதல் வாதம்) நவீன கால தத்துவ உலகில் நிலவின. அறிவு முதல்வாதம் நியாயித்தலையும், அனுபவமுதல் வாதம் புலனனுபவத்தையும் பிறப்பிடமாகவும், அடிப்படையாகவும் கொண்டது எனலாம். இவ்விரு தத்துவங்களுமே குறைபாடுடையனவாய் காணப்பட்ட பொழுதிலும் இரண்டிலுமே உண்மைக் கூறுகளும் காணப்பட்டன. ஒன்றில் காணப்படும் உண்மைக்கூறு மற்றையதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது. எனவே இவ்விரு தத்துவங்களையும் இணைத்து முழுமையான ஓர் தத்துவத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த இமானுவெல் கான்ட் இப்பணியை முன்னெடுத்தார் (அவரது இப்பணியினை காலம், வெளி, தீர்ப்புக்கள் என்பன பற்றிய சிந்தனைகள் தெளிவாக வெளிப்படுத்தின). இது அறிவாராட்சியியல் வரலாற்றில் ஓர் திருப்புமுனையாக அமைந்தது.கான்டினுடைய சிந்தனைகள் ஐரோப்பா முழுவதும் தனது செல்வாக்கினை விஸ்தரித்துக் கொண்டது.19ம் நூற்றாண்டில் இமானுவெல் கான்டின் சிந்தனைகள் பெற்றிருந்த செல்வாக்கினைப் போல் வேறு எந்த சிந்தனைகளும் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. எனினும் பிற்பட்ட காலத்தில் கான்டினுடைய சிந்தனைகள் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டன. இதன் விளைவாக சமகால மெய்யியலில் கான்டினுடைய சிந்தனைகளை ஆதரிப்பதும் (கண்ட மெய்யியல்), விமர்சிப்பதுமான (பகுப்பாய்வு மெய்யியல்) இருபெரும் தத்துவப் பிரிவுகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த வகையில் முன்னெழுந்த சிந்தனைகளின் சங்கமமாகவும், பின்னெழுந்த சிந்தனைகளின் ஊற்றாகவும் கான்டினது சிந்தனைகள் விளங்கின. இதனாலே தான் 'இமானுவெல் கான்ட் அவர்களின் தத்துவங்களை அறியாதோர், அவருக்குப் பின்னெழுந்த தத்துவங்களைப் புரிந்து கொள்ள இயலாது' என்றொரு கருத்து தத்துவ உலகில் நிலவுகின்றது. எனவே கான்டினுடைய சிந்தனைகளின் பரிமாணத்தையும், அவை பின்னெழுந்த சிந்தனைகளில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் பகுப்பாய்வு செய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்விற்குத் தேவையான தரவுகள் கான்டினுடைய பிரதான நூல்கள், பருவ இதழ்களில் வெளியான கட்டுரைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் இவ் ஆய்வானது விபரணமுறை, பகுப்பாய்வுமுறை, விமர்சனமுறை என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**Keywords:-**நியாயவாதம், அனுபவவாதம், விமர்சன மெய்யியல், தீர்ப்புக்கள்

## 1. அறிமுகம்:

அறிவாராட்சியியலில் மையமாக அமையும். பிரச்சினை உண்மை அறிவு எவ்வாறு எழுகின்றது என்பதே ஆகும். இதற்கு நவீன காலத்தில் அறிவுமுதல் வாதம் (Rationalism), அனுபவமுதல் வாதம் (Empiricism) எனும் இரு வகையான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. அறிவுமுதல் வாதம் நியாயித்தல் அல்லது பகுத்தறியும் திறனால் மாத்திரமே சரியான அறிவைப் பெறமுடியும் என்றும், காரணப்படுத்திப் பார்க்கும் பகுப்பாய்வுக்கு உடன்படாத எதுவும் அறிவாகாது என்றும் விபரித்தது. அனுபவமுதல் வாதம் அறிவுமுதல் வாதத்திற்கு மாறாக அனுபவமே சரியான அறிவினைத் தரவல்லது என்றும், அனுபவ எல்லைக்கும், சோதனைக்கும் உட்படாத எதையும் அறிவாக ஏற்கமுடியாது என்றும் விபரித்தது. புலனுணர்ச்சிக் கொள்கையினர் அறிவுமுதல் வாதத்தில் காணப்பட்ட குறைபாடுகளை தெளிவாக சுட்டிக்காட்டினர். அவர்கள் உள்ளுறை எண்ணங்கள் புலனுக்குட்படாதவை என்றும் விளைவற்றது என்றும் குறிப்பிட்டனர். அத்தோடு அது எதனையும் செய்ய முடியாதாய் உள்ளது என்றும் குறிப்பிட்டனர். உள்ளுறை எண்ணங்கள் இருப்பது உண்மையாகவே இருப்பினும் அவை அனுபவத்திற்குப் பின்னரே வெளிப்படுகின்றன என்றனர். அத்தோடு உள்ளுறை எண்ணம் உண்டு எனின் நிறம் குறித்த அறிவு எல்லோரிடமும் இருந்தாக வேண்டும். ஆனால் பிறவியிலேயே பார்வையற்ற ஒருவனுக்கு அது குறித்த அறிவு இருப்பதில்லை. அத்தோடு அறிவுமுதல் வாதத்தினரின் கருத்துப்படி எல்லா அறிவும் பொதுமைக்குட்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் கடவுள் குறித்த அறிவோ அல்லது ஒழுக்கம்

குறித்த அறிவோ பொதுமையானதாக இல்லை. எனவே அறிவைப் பெற நியாயவாதம் போதுமானதல்ல. மாறாக நியாயவாதிகளும் புலனுணர்ச்சிக் கொள்கையின் குறைபாடுகளை தெளிவுபடுத்தினர். அவர்கள் கணிதம் அளவையியல் போன்றன தரும் அறிவு நிச்சயமானது. அத்தகைய அறிவு எவ்வாறு புலன்வழி பெறப்பட முடியும். அது மாத்திரமன்றி மனிதனுடைய புலன்கள் வரையறைக்குட்பட்டவை. அவற்றினால் பெறப்படும் அறிவு நிச்சயத்தன்மை உடையவையாய் இல்லை. ஏனெனில் வரையறைக்குட்பட்ட புலன்கள் என்றும் ஏமாற்றத்தையே தரக்கூடியன என்றனர். இவ்வாறாக இரு தத்துவங்களுமே குறைபாடுடையனவாய் காணப்பட்ட பொழுதிலும் இரண்டிலுமே உண்மைக் கூறுகளும் காணப்பட்டன. ஒன்றில் காணப்படும் உண்மைக்கூறு மற்றையதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது. எனவே இவ்விரு தத்துவங்களையும் இணைத்து முழுமையான ஓர் தத்துவத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த இமானுவெல் கான்ட் இப் பணியை முன்னெடுத்தார். இந்த வகையிலேயே நாம் இமானுவெல் கான்ட் அறிவாராட்சியியலுக்கு ஆற்றிய பங்களிப்பினை கண்டுகொள்ள முடிகின்றது.

## 2. ஆய்வின் கருதுகோள்:

முன்னெழுந்த சிந்தனைகளின் சங்கமமாகவும், பின்னெழுந்த சிந்தனைகளின் ஊற்றாகவும் கான்டினது சிந்தனைகள் விளங்கின.

## 3. ஆய்வு முறையியல்:

இவ் ஆய்விற்குத் தேவையான தரவுகள் கான்டினுடைய பிரதான நூல்கள், பருவ இதழ்களில் வெளியான கட்டுரைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் இவ் ஆய்வானது விபரணமுறை, பகுப்பாய்வுமுறை, விமர்சனமுறை என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

## 4. பகுப்பாய்வு:

அறிவாராட்சியியலில் மையமாக அமையும். பிரச்சினை உண்மை அறிவு எவ்வாறு எழுகின்றது என்பதே ஆகும். இதற்கு நவீன காலத்தில் அறிவுமுதல் வாதம் (Rationalism), அனுபவ வாதம் (Empiricism) என இரு வகையான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. அறிவுமுதல் வாதம் நியாயித்தல் அல்லது பகுத்தறியும் திறனால் மாத்திரமே சரியான அறிவைப் பெறமுடியும் என்றும், காரணப்படுத்திப் பார்க்கும் பகுப்பாய்வுக்கு உடன்படாத எதுவும் அறிவாகாது என்றும் விபரித்தது. அனுபவமுதல் வாதம் அறிவுமுதல் வாதத்திற்கு மாறாக அனுபவமே சரியான அறிவினைத் தரவல்லது என்றும், அனுபவ எல்லைக்கும், சோதனைக்கும் உட்படாத எதையும் அறிவாக ஏற்கமுடியாது என்றும் விபரித்தது. இவ்விரு தத்துவங்களும் வேறுபட்டவை மட்டுமல்ல, முரண்பட்டவையும் ஆகும். எனினும் இவ்விரு தத்துவங்களும் ஒன்றை ஒன்று முற்றாக விலக்கவில்லை என்றே கூறவேண்டும். ரேனே டேக்காட், ஸ்பினோசா, லைபினிஸ்ட் போன்றோர் நியாயவாதத்தின் முன்னோடிகளாவர். ஜோன் லொக், பாக்ளி, டேவிட்கியூம் போன்றோர் அனுபவ வாதத்தின் முன்னோடிகளாவர். இவர்கள் தாம் ஏற்றுக் கொண்ட கொள்கைகள் முறையானவையே என்று விளக்குவதோடு மட்டுமன்றி தமக்கு எதிரான கொள்கைகளின் குறைபாடுகளை விளக்கவும் முற்பட்டனர். இதன் விளைவாக இவ்விரு கொள்கைகளிலும் காணப்பட்ட குறைபாடுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டன.

புலனுணர்ச்சிக் கொள்கையினர் அறிவுமுதல் வாதத்தில் காணப்பட்ட குறைபாடுகளை தெளிவாக சுட்டிக்காட்டினர். அவர்கள் உள்ளுறை எண்ணங்கள் புலனுக்குட்படாதவை என்றும் விளைவற்றது என்றும் குறிப்பிட்டனர். அத்தோடு அது எதனையும் செய்ய முடியாதாய் உள்ளது என்றும் குறிப்பிட்டனர். உள்ளுறை எண்ணங்கள் இருப்பது உண்மையாகவே இருப்பினும் அவை அனுபவத்திற்குப் பின்னரே வெளிப்படுகின்றன என்றனர். அத்தோடு உள்ளுறை எண்ணம் உண்டு எனின் நிறம் குறித்த அறிவு எல்லோரிடமும் இருந்தாக வேண்டும். ஆனால் பிறவியிலேயே பார்வையற்ற ஒருவனுக்கு அது குறித்த அறிவு இருப்பதில்லை. அத்தோடு அறிவுமுதல் வாதத்தினரின் கருத்துப்படி எல்லா அறிவும் பொதுமைக்குட்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் கடவுள் குறித்த அறிவோ அல்லது ஒழுக்கம் குறித்த அறிவோ பொதுமையானதாக இல்லை. எனவே அறிவைப் பெற நியாயவாதம் போதுமானதல்ல. மாறாக நியாயவாதிகளும் புலனுணர்ச்சிக் கொள்கையின் குறைபாடுகளை தெளிவுபடுத்தினர். அவர்கள் கணிதம் அளவையியல் போன்றன தரும் அறிவு நிச்சயமானது. அத்தகைய அறிவு எவ்வாறு புலன்வழி பெறப்பட முடியும். அது மாத்திரமன்றி மனிதனுடைய புலன்கள் வரையறைக்குட்பட்டவை. அவற்றினால் பெறப்படும் அறிவு

நிச்சயத்தன்மை உடையவையாய் இல்லை. ஏனெனில் வரையறைக்குட்பட்ட புலன்கள் என்றும் ஏமாற்றத்தையே தரக்கூடியன என்றனர்.

இவ்வாறாக இரு தத்துவங்களுமே குறைபாடுடையனவாய் காணப்பட்ட பொழுதிலும் இரண்டிலுமே உண்மைக் கூறுகளும் காணப்பட்டன. ஒன்றில் காணப்படும் உண்மைக்கூறு மற்றையதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது. எனவே இவ்விரு தத்துவங்களையும் இணைத்து முழுமையான ஓர் தத்துவத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த இமானுவெல் கான்ட் இப் பணியை முன்னெடுத்தார்.

இமானவெல் கான்ட் அறிவியல் சாத்தியமானது ஆனால் பௌதீக அதீதம் சாத்தியமற்றது எனும் கருத்தினை தெளிவாக நிலைநாட்ட விரும்பினார். அறிவியலை எது சாத்தியமாக்கியது என்பது அவருடைய முன்னோர்களால் புரிந்துகொள்ளப்படவில்லை என்கின்றார். அவர்கள் அறிவின் தோற்றுவாய் நியாயவாதமா? அனுபவவாதமா? எனும் முரண்பாட்டில் சிக்கிக் கொண்டனர். நியாயித்தலினதும், அனுபவத்தினதும் இணைவினாலேயே அறிவு பெறப்படுகின்றது என்பதனை கான்ட் நிறுவ முயன்றார். 'பகுத்தறிவில்லா அனுபவம் குருட்டுத்தனமானது அல்லது நோக்கற்றது என்றும், அனுபவமில்லா பகுத்தறிவு உள்ளீடற்றது அல்லது வெறுமையானது என்றும்' கான்ட் குறிப்பிடுகின்றார். கான்டினுடைய இந்த சிந்தனை மூன்று கட்டங்களைக் கொண்ட வளர்ச்சிப் போக்கினை உடையது. ஆரம்பத்தில் கான்ட் நியாயவாதக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருந்தார். இது அவரது அறிவாராட்சியியலின் முதலாவது கட்டம். நியாய வாதத்தில் குறைபாடுகளைக் கண்டுகொண்ட கான்ட் பின் அனுபவவாதக் கருத்துக்களை ஆதரிக்கத் தொடங்கினார். காலப்போக்கில் அனுபவமுதல் வாதத்திலும் குறைபாடுகளைக் கண்டுகொள்ளத் தொடங்கினார். இதனால் அவரது அறிவாராட்சியியல் சிந்தனைகளின் மீண்டும் ஓர் திருப்பம் ஏற்பட்டது. இந்த மூன்றாவது காலகட்டமே கான்டினது அறிவாராட்சியியலில் இன்றியமையாததும், முக்கியமானதுமான காலகட்டம் ஆகும். நியாயவாதத்திலும், அனுபவவாதத்திலும் குறைபாடுகளைக் கண்ட கான்ட் அவற்றில் சில உண்மைக் கூறுகளையும் கண்டார்.

எனவே 1770 இல் ஆரம்பமான இக்காலகட்டத்தின் உச்சநிலையாக 1781ல் நியாயவாதத்தையும், அனுபவவாதத்தையும் ஒன்றாக இணைப்பது (Synthesis of Rationalism and Empiricism) என்ற எண்ணம் அவரது மனதில் உதயமானது. அவ்வாறு இணைத்துப் பெறப்பட்ட முறையை 'விமர்சன மெய்யியல்' (Critical Philosophy) என வழங்கினார். தன்னுடைய இந்த சிந்தனையை அவர் தனது 'தூய அறிவின் விமர்சனம்' (Critique of Pure Reason) என்ற நூலில் தெளிவாக வெளிப்படுத்தினார். ("Kant's magnum opus, 'The Critique of Pure Reason', aimed to unite reason with experience") இந்நூலானது தனிமங்கள் பற்றிய கொள்கை (Doctrine of Elements), முறை பற்றிய கொள்கை (Doctrine of Method) எனும் இரு பிரதான பகுதிகளைக் கொண்டது. தனிமங்கள் பற்றிய கொள்கை புலன், அளவையியல் எனும் இரு பகுதிகளைக் கொண்டது. அதில் அளவையியல் பகுப்பியல் (Analytic), முரணாய்வு (Dialectic) எனும் இரு பகுதிகளைக் கொண்டது. இவற்றுள் புலன், பகுப்பியல், முரணாய்வு எனும் மூன்றும் முக்கியமான பகுதிகளாக காணப்படுகின்றன. மேற்குறித்த மூன்று பகுதிகளையும் முத்துமோகன் தன்னுடைய ஐரோப்பிய தத்துவங்கள் என்ற நூலில் முறையே நிகழ்வியல், பகுத்தறிவு, இயங்கியல் என்றவாறாக குறிப்பிடுகின்றார்.

எல்லா அறிவுமே புலன்களிலிருந்து தொடங்குகின்றன. புற உலகிலுள்ள பொருட்களுடன் புலன்கள் பொருந்தும் பொழுது அனுபவம் கிடைக்கப் பெறுகின்றது. இதுவே மனிதனுக்குக் கிடைக்கும் முதல் மூல அறிவு. எனினும் புலன்கள் மட்டுமே அறிவுக்கு ஆதாரம் என்று நினைத்துவிட முடியாது. புலன் வழியாகக் கிடைக்கும் அறிவு பலவகையானது. (ஒலி, ஒளி, சுவை, நாற்றம், உணர்வு). தனித்தனியாக தான்தோன்றித் தனமாக கிடைக்கும் தகவல்களை ஒன்றிணைப்பது எது? கட்டமைப்பது எது? பொதுமைப்படுத்துவது எது? ஒழுங்கமைப்பது எது? தொகுப்பது எது? அதுவே பகுத்தறிவு.

எனவே கான்ட் புலன் எனும் பகுதியினூடாக தன்னுடைய கடந்தநிலை முறையை (விமர்சன முறையை) அதாவது புலனனுபவமும், பகுத்தறிவும் இணைக்கப்படும் தன்மையை விளக்கிச் செல்கின்றார். இதில் அவர் காலம் இடம் எனும் இரு விடயங்களைப் பற்றிப் பேசுகின்றார். ஒரு பொருளைப் பற்றி தனித்தனியாக நமக்குக் கிடைக்கும் புலனுணர்வுத் தகவல்களை ஒருங்கிணைக்கும் இரண்டு வடிவங்கள் நமது மனதில் உள்ளன. எனவே எந்தச் செய்தியை

அவை பெறும் போதும் அந்த இரண்டு வடிவங்களை அதன் மீது பதிக்கும். அதாவது நமது மனமானது இரு வண்ண ஆடிகளைக் கொண்டுள்ளது எனக் கொள்ளலாம். எனவே எந்தத் தூண்டுதலைப் புலன் பெற்றாலும் அதன் மீது அந்த இரு வண்ணங்களும் பதிக்கப்படும். மற்றொரு வகையில் கூறுவதாயின் புலன்வழி பெறப்படும் தகவல்கள் காலம், வெளி என்ற இரு அச்சுவழியாகச் சென்று அறிவாகப் பரிணமிக்கின்றது. எனவே தான் கான்ட் காலம், வெளி ஆகிய இவற்றை புலச்சார்ப்பற்ற தனிமங்கள் என்கின்றார். அவை அகநிலை வடிவங்கள்; புலனுணர்வுகளில் ஏற்கனவே உள்ளார்ந்து இருப்பவை என்கின்றார்.

காலமும், வெளியும் புறவுலகில் இருப்பவை என நாம் சாதாரணமாக கற்பனை செய்யலாம். கான்ட் இதனை மறுக்க நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதாரங்களை முன்வைக்கின்றார். நேர்முகமாக விளக்கும் முறையை பௌதீக அதீத இயல்பான விளக்கவுரை என வழங்குகின்றார். மறைமுகமாக காலமும், வெளியும் புலச்சார்பின்றி உள்ளுறைபவையாக இல்லையெனின் ஐயுற முடியாதவையான சில விஞ்ஞானங்கள் இல்லாது போய்விடும் என்றவாறு விளக்குவதனை கடந்தநிலை இயல்பான விளக்கவுரை என்கின்றார்.

புலன் சாராத அல்லது அனுபவம் சாராத மனச்சட்டகங்கள் தாறுமாறான, தனியான குழப்பமான புலனுணர்வுகளை கட்டமைக்கும் படைப்புப் பணியில் ஈடுபடுகின்றன. புலனுணர்வுகள் வெறும் கச்சாப் பொருட்களே அவற்றிற்கு வடிவம் வழங்குபவை காலம், வெளி என்ற மனச்சட்டகங்களே. மனச் சட்டகங்களுக்கு புனைவுத் தன்மை உண்டு. முரண்பாடற்ற ஒன்றிணைந்த தோற்றத்தை அவை உருவாக்கித் தருகின்றன. வடிவமில்லாத, உருவமில்லாத புலனுணர்வுகளுக்கு உருவமும், வடிவமும் வழங்குபவை இந்த மனச்சட்டகங்களே ஆகும்.

காலம் இடம் இவற்றைப் பற்றிய பௌதீக அதீத இயல்பான விளக்கவுரையில் நான்கு காரணங்களை முன்வைத்து அவை புலனுணர்ச்சிக்கு முன்னதாகவே இருப்பிலுள்ளவை என்பதனை விளக்குகின்றார்.

1. காலம், இடம் என்பன பற்றிய எண்ணங்கள் அனுபவ இயல்பானவை அல்ல. இட உறவுகளைப் பற்றிய எண்ணம் அனுபவத்திலிருந்து பெறக்கூடியதன்று. ஏனெனில் தோற்றநிலைப் பொருட்கள் இட உறவு பெற்றுள்ளன என்று அறிவதற்கு முன்னதாகவே இட உறவுகளைப் பற்றிய நுகர்ச்சியை நிகழச் செய்வதனால் காலம், வெளி இவற்றைப் பற்றிய எண்ணங்கள் புறவுலகிலிருந்து பெறமுடியாத தன்மையைக் கொண்டுள்ளன.

2. காலம், இடம் என்பவற்றைப் பற்றிய எண்ணங்கள் கட்டாயத் தன்மை வாய்ந்தவை. ஆனால் கட்டாயத் தன்மை புலச்சார்பற்றது என்பதனை நாம் மீண்டும் நினைவில் கொள்ள வேண்டும். பொருட்கள் இன்றி காலம், இடம் என்பவற்றை கற்பனை செய்ய முடியும். ஆனால் காலம், வெளி என்பன இன்றி பொருட்களைக் கற்பனை செய்ய முடியாது. எனவே காலம் இடம் என்பவை கட்டாயத் தன்மை வாய்ந்தவை. எனவே அவை நுகர்ச்சிக்கு முன்னெழுபவை.

3. காலமும், இடமும் பல தனிப்பட்ட காலங்கள், இடங்கள் இவற்றின் நுகர்ச்சியிலிருந்து பெறப்பட்ட எண்ணக்கருக்கள் அல்ல. அவை உடனடி உணர்வுகளே ஆகும். எடுத்துக் காட்டாக இடத்தைப் பற்றியோ காலத்தைப் பற்றியோ பேசும் போது அவை பற்றிய உணர்வு ஏற்கனவே முன்னமைந்ததாக எமது உள்ளத்திலே உடன் பிறந்திருக்கின்றது.

4. எல்லைக்குட்பட்டது, அளவுக்குட்பட்டது போன்றவை அனுபவத்திலுள்ளவை. ஆனால் இடம் எல்லையற்றது; காலம் அளவற்றது என்பதனை வலியுறுத்துகின்றது. எனவே காலம் வெளி என்பவை அனுபவத்திற்கு முன்னமைந்தவை.

இவ்வாறாக கான்ட் நேரடியாக காலம், வெளி என்பவை நுகர்ச்சிக்கு முன்னமைந்தவை என்பதற்கு ஆதாரங்களை வழங்கினார்.

மேலும் கான்ட் காலம், இடம் பற்றிய கடந்தநிலை இயல்பான விளக்கவுரையில் காலம், இடம் எனும் இரு அம்சங்களும் எமது புலனுணர்வுக்கு முன்னதாகவே எமது உள்ளத்திலிருக்கும் இரு அம்சங்கள் என்பதனை மறைமுகமான முறையில் விளக்குகின்றார்.

1. காலம், இடம் என்பவை புலச்சார்பற்றவை அல்ல எனின் கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றில் கட்டாய உண்மைகளைப் பெறமுடியாது. ஆனால் கணிதத்தில் கட்டாய உண்மைகள் பெறப்படுகின்றன என்பது மறுக்க முடியாதது. எனவே காலம் வெளி ஆகிய இரண்டும் புலனுணர்ச்சிக்கு முன்னதாகவே உள்ளத்தில் இருக்கின்றன.

2. கட்டாயத் தன்மையும், பொதுத் தன்மையும் அனுபவ நுகர்ச்சிக்கு உரியன அல்ல. ஆனால் காலமும், இடமும் கட்டாயத் தன்மையும், பொதுத் தன்மையும் கொண்டவை என்பதனால் அவை நுகர்ச்சிக்கு முன்னதாகவே உள்ளத்தில் உறைபவை.

இவ்வாறாக கான்ட் மறைமுகமான முறையில் காலம், வெளி என்பவை நுகர்ச்சிக்கு முன்னமைந்தவை என்பதனை நிறுவுகின்றார்.

இந்த வகையில் நோக்குகின்ற பொழுது காலம், வெளி பற்றிய மறு மதிப்பீடுகளில் இருந்து கான்டின் சிந்தனை துவங்குகின்றது எனலாம். பௌதீக உலகைப் பற்றிய உண்மைகள் யாவும் காலம், வெளி பற்றிய உண்மைகளைப் பொறுத்தே அமைகின்றன. எனவே பொருட்களின் பண்புகளை அறிய விரும்பும் நாம் காலம் வெளி குறித்து முதலில் கவனத்தை செலுத்த வேண்டும் என்கின்றார்.

இதனூடாக கான்ட தனது நோக்கமான அறிவுமுதல் வாதத்தையும், அனுபவமுதல் வாதத்தையும் இணைப்பதனை உறுதி செய்து கொள்கின்றார். அதாவது புலன்வழி பெறப்படும் தகவல்கள் அனுபவ வாதத்தினைச் சார்ந்தவை. அவை மனதிலுள்ள காலம், வெளி என்னும் சட்டகங்களால் ஒழுங்கமைக்கப்படுதல் நியாயவாதத்தை சார்ந்தது. எனவே நியாய வாதத்தினதும், அனுபவ வாதத்தினதும் இணைவினால் அறிவு பெறப்படுகின்றது என்கிறார்.

மேற்குறித்தவாறு புலன் என்ற பகுதியினூடாக தனது கடந்த நிலை முறையை விளக்கிய அல்லது நிறுவிய கான்ட் பகுப்பியல் என்ற பகுதியினூடாகவும் தனது நோக்கத்தை வெளிப்படுத்த முனைந்தார். பகுப்பியல் என்பது அளவையியலின் ஒரு பகுதி. அனுபவத்தில் கிடைத்த காட்சியை மனம் தொடர்ந்து பகுப்பாய்வு செய்கின்றது. புலனறிவால் நமக்குக் கிடைப்பது அனுபவ ஒழுங்கு மட்டுமே. ஆனால் அதனை கருத்து நிலையில் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை எழுகின்றது. இதற்கு பகுத்தறிவு வழிவகுக்கின்றது. பகுத்தறிவில் நான்கு பகுத்தறிவுக் கருவிகள் இருப்பதாக கான்ட் குறிப்பிடுகின்றார். அவையாவன

1. அளவு- ஒன்று, பல, முழுமை.
2. பண்பு - இருப்பு, மறுப்பு, எல்லை.
3. உறவு- தற்செயலானது, காரணத் தொடர்பு கொண்டது, பரஸ்பர தாக்கம்.
4. முறைமை - வாய்ப்பும் சாத்தியமும், இருப்பும் இன்மையும், கட்டாயமும் தற்செயலும்.

இந்த நான்கு பகுத்தறிவுக் கருவிகளும் நம்முள் மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளன. இவற்றை கதிரவேலுப்பிள்ளை தன்னுடைய ‘மேலைநாட்டு தர்சன வரலாற்றுச் சுருக்கம்’ என்ற நூலில் பன்னிரு விவேகமுறைகள் அல்லது விதிகள் அல்லது வாயில்கள் என்றவாறாக விரித்துக் குறிப்பிட்டுள்ளார்.

இவை பகுத்தறிதலின் சட்டகங்கள். இவை புலன்சாராதவை; அனுபவம் சாராதவை; பகுத்தறிவின் சொந்தக் கருவிகள். அறிவை இவை கட்டமைக்கின்றன; ஒழுங்கமைக்கின்றன. அறிவை இவைதான் சாத்தியமாக்குகின்றன. இவையின்றி நமது அறிதல் சாத்தியமாகா. எனவே புலனுணர்வுத் தகவல்கள் பகுத்தறிவுக் கருவிகளால் வடிவமைக்கப்படும் பொழுது அவை அறிவாகின்றன. எனவே அனுபவ வாதத்தினதும், நியாயவாதத்தினதும் இணைவினால் அறிவு வெளிப்படுத்தப்படுகின்றது என்கின்றார்.

அடுத்து கான்ட் முரணாண்வு அல்லது இயங்கியல் என்ற பகுதியில் அறிவு என்ற நிலையினைக் கடந்து தத்துவம் என்ற நிலைக்குச் செல்கின்றார். இங்கு கான்ட் மூன்று துறைகளின் இறுதி உண்மைகளினைப் பற்றிப் பேசுகின்றார். அவையாவன

1. உளவியல் (மனித மனம் பற்றியது),
2. பிரபஞ்சவியல் (பிரபஞ்சக் கட்டமைப்புப் பற்றியது),

3. இறையியல் (இறைவன் பற்றியது).

இந்த மூன்றுமே தத்துவ உலகில் பிரச்சினைகள் என்று கான்ட் இனங்காட்டினார். இவற்றை எதிர்நிலைகளால் விளங்கிக் கொள்ள முடியும் என்பதே கான்டினது கருத்தாக உள்ளது. எடுத்துக்காட்டாக பிரபஞ்சத்தை விளங்கிக் கொள்ள பின்வரும் எதிர்நிலைகளைக் குறிப்பிடுகின்றார்.

1. உலகம் காலம், வெளி எல்லைகளைக் கொண்டது.
   உலகம் காலம், வெளி எல்லைகள் அற்றது.
2. அணுக்களால் ஆனது இவ்வுலகம்.
   சகலமும் உட்தொடர்பு கொண்ட சிக்கலான அமைப்பே உலகம்.
3. காரணகாரிய தொடர்பிலிருந்து விடுபட்ட சுதந்திர இயக்கம் உலகில் உண்டு.
   சகல நிகழ்வுகளும் காரணகாரியத் தொடர்பால் நிர்ணயமாகின்றன.
4. உலகில் அடிப்படைச் சாராம்சம் ஒன்று உண்டு.
   சாரம்ச அடிப்படை எதுவும் உலகிற்கு கிடையாது.

இந்த முரண்பாடுகளில் ஒவ்வொன்றுக்கும் போதிய நிரூபணங்கள் வழங்க முடியும். அவற்றுள் ஒன்றை ஏற்று அதன் மூலம் உலகினைப் புரிந்து கொள்ள முடியும் என்கின்றார். அவ்வாறே இறைவன் உண்டு, இறைவன் இல்லை என்ற எதிர்நிலைகள் ஊடாக இறைவன் பற்றி புரிந்து கொள்ள முடியும் என்கின்றார்.

அடுத்து கான்ட் தன்னுடைய கடந்தநிலை முறையை அல்லது விமர்சன முறையை தீர்ப்புக்கள் ஊடாக விளக்குகின்றார். 'எண்ணங்களிடையே எழும் உடன்பாடும் மறுப்பும் தீர்ப்புக்களாகின்றன. தீர்ப்புக்கள் அறிவுத் துளிகளாகின்றன'. முதலில் புலன் வாயிலாக காட்சி பெறப்படுகின்றது. நியாயித்தல் அல்லது சிந்தனை செயலற்றிருக்கின்றது. புலனுணர்வுத் தகவல்கள் தொகுக்கப்பட்டு தீர்ப்புக்களாக அமைக்கப்படும் பொழுது நியாயித்தல் செயற்படுகின்றது; புலன் செயலற்றிருக்கின்றது. இவை கணப்பொழுதில் நிகழும் செயற்பாடுகள். எனவே இவை இரண்டும் இணைந்தே செயற்படுகின்றன எனலாம். ஆதலால் புலக்காட்சி + நியாயித்தல் = அறிவு எனலாம். இதனைக் கான்ட் தீர்ப்புக்கள் ஊடாக விளக்குகின்றார். கான்ட் இங்கு தீர்ப்புக்கள் என்று குறிப்பிடுவது எடுப்புக்களையே (Proposition). தீர்ப்புக்கள் உடன்பாட்டு வடிவிலும் எதிர்மறை வடிவிலும் வெளிப்படுத்தப்படுகின்றன. 'பூமி ஒரு கோள்' இது உடன்பாட்டுத் தீர்ப்பாகும். 'புலி பாய்வதில்லை' இது எண்ணத்தை மறுப்பதனால் எதிர்மறைத் தீர்ப்பாகும்.

மேலும் தீர்ப்புக்கள் யாவும் நமது அறிவைப் பெருக்கும் என்று கூறமுடியாது. சில தீர்ப்புக்கள் உள்ளதையே விரித்துரைக்கும். சில தீர்ப்புக்கள் புதிய அறிவைச் சேர்த்துரைக்கும். இவையே நம் அறிவைக் காட்டும் இயல்பினவாகும். இந்த வகையில் தீர்ப்புக்கள் பகுப்புத் தீர்ப்பு, தொகுப்புத் தீர்ப்பு என இருவகைப்படுத்தப்படுகின்றன. தொகுப்புத் தீர்ப்புக்கள் கட்டாய உறவுள்ளவை, தற்செயல் உறவுள்ளவை என வகைப்படுத்தப்படுகின்றன.

இதில் பகுப்புத் தீர்ப்பின் மூலமாக உண்மை அறிவு பெறப்படுகின்றது எனக் கருதமுடியாது. ஏனெனில் பகுப்பெடுப்புக்கள் எழுவாயில் கூறுவதையே பயனிலை கூறுவதாக கூறியது கூறலாக அமைந்துள்ளன. இதனால் அவை கட்டாயத் தன்மை வாய்ந்தவையாக உள்ளன. இது அனுபவச் சார்பின்றி நியாயித்தலை மாத்திரம் கொண்டு பெறப்படும் அறிவாகின்றது.

E.g. விதவைகள் கணவனை இழந்தவர்கள்.

(Analytic proposition: a proposition whose predicate concept is contained in its subject concept. E.g. All bachelors are unmarried)

மாறாக எழுவாய்க்கு பொருத்தமான வகையில் பயனிலை தொகுப்படுவதாக அமையும் எடுப்புக்கள் தொகுப்பெடுப்புக்கள் ஆகும். இங்கு எழுவாயும், பயனிலையும் வேறு வேறு விடயங்களைக் குறிப்பனவாகும். (Synthetic proposition: a proposition whose predicate concept isn't contained in its subject concept. E.g. All bachelors are happy)

இத் தொகுப்பெடுப்பில் எழுவாய்க்கும், அதற்குத் தொகுக்கப்படும் பயனிலைக்கும் இடையிலான உறவின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு அவை தற்செயல் உறவுள்ள தொகுப்பெடுப்புக்கள், கட்டாய உறவுள்ள தொகுப்பெடுப்புக்கள் என இரு வகைப்படுத்தப்படுகின்றன.

தற்செயல் உறவுள்ள தொகுப்பெடுப்புக்களில் எழுவாய்க்கு பொருத்தமான பயனிலை தொகுக்கப்படினும் அது கட்டாயத் தன்மை அற்றதாக இருக்கும். எடுத்துக்காட்டாக 'நாய் குரைக்கும்' என்ற தீர்ப்பில் நாய் என்ற எழுவாய்க்கு பொருத்தமாக குரைக்கும் என்ற பயனிலை தொகுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நாய் குரைக்கும் என்பது கட்டாய உறவினைக் கொண்டிருக்கவில்லை. ஒருவர் ஒரு நாயைப் பார்க்கும் போது அது குரைக்கவில்லை என்றால் அது நாய் இல்லை என்று கூறிவிட முடியாது. இங்கு இத்தீர்ப்பு அனுபவம் சார்ந்ததாக உள்ளது. எனவே அனுபவம் மாத்திரம் உண்மை அறிவைத் தராது.

கட்டாய உறவுள்ள தொகுப்பெடுப்புக்களில் எழுவாய்க்கு பொருத்தமான பயனிலை தொகுக்கப்படுவதோடு எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே இன்றியமையா உறவும் காணப்படும்.

E.g. வெப்பம் உலோகத்தை விரிவடையச் செய்யும்.

இங்கு வெப்பம் என்ற எழுவாய்க்கும் உலோகம் விரிவடைதல் என்ற பயனிலைக்கும் இடையே கட்டாயத் தன்மையும், பொதுத் தன்மையும் உள்ள உறவு உள்ளது. இங்கு இரண்டு நிலைகள் உள்ளது.

1. வெப்பம், உலோகம் விரிவடைதல் என்பன புலனுணர்வுகளால் அறியப்படுகின்றன (அனுபவவாதம்).
2. உலோகம் வெப்பத்தால் தான் விரிவடைகின்றது என்பது நியாயித்தலால் பெறப்படுகின்றது (அறிவுமுதல் வாதம்).

எனவே இத்தீர்ப்பு அறிவையும் அனுபவத்தையும் இணைத்த வகையில் பெறப்படுகின்றது. இதுவே உண்மை அறிவைப் பெற ஏதுவாய் உள்ளது என்கிறார். எனவே கான்ட் அனுபவவாதமும், நியாயவாதமும் இணைந்த கடந்தநிலை முறை மூலம் உண்மை அறிவை பெறமுடியும் என்பதனை தீர்ப்புக்களின் ஊடாக விளக்குகின்றார்.

கான்டின் கடந்தநிலை முறையானது அனுபவத்திற்கு காரணமாய் இருப்பவைகளை கண்டுபிடிக்கும் பொருட்டு அதன் அடிநிலைக்குச் செல்கின்றது. அதாவது அனுபவத்தைக் கடந்து செல்கின்றது. கான்டின் இம்முறையானது மேடைமீது தோன்றும் காட்சிகள் எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றது என்பதனை திரைக்கு அப்பால் சென்று பார்ப்பதனை ஒத்திருக்கின்றது. இம்முறை அறிவுமுதல் வாதிகளின் கணித முறையினையும், அனுபவமுதல் வாதிகளின் உளவியல் முறையையும் விலக்கி புதியதொரு பாதையில் மெய்யியலை இட்டுச் செல்கின்றது.

எது எவ்வாறாயினும், அவருக்கு பின் எழுந்த சிந்தனைகளின் விருத்திக்கு கான்டினது சிந்தனைகள் இன்றியமையாததாக இருந்தது என்பதனை எவராலும் மறுக்க முடியாது எனலாம். அத்தோடு கான்டினது சிந்தனைகளைப் புரிந்து கொள்ளாமல் பின்னெழுந்த சிந்தனைகளைப் புரிந்து கொள்ள முடியாது என்பது தத்துவ உலகில் நிலவுகின்ற கருத்தாகும். அது மாத்திரமன்றி கான்டினுடைய சிந்தனைகள் அனுபவவாதம், அறிவுமுதல் வாதம் என்பவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி புதியதொரு முறையினை தத்துவ உலகிற்கு வழங்கியுள்ளது.கான்டினுடைய இந்த புதிய மெய்யியல் முறையானது கருத்துமுதல் வாதம் மெய்யியல் உலகில் செல்வாக்குப் பெறுவதற்கு வித்திட்டது. கான்டினுடையை சிந்தனைகளினைத் தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் அந்நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஜேர்மனிய கருத்துமுதல் வாதம் ஐரோப்பா முழுவதும் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. பின்னர் பிட்சே (Fichte), ஸ்கெல்லிங் (Schelling), ஹெகல் (Hegel) போன்ற சிந்தனையாளர்களின் ஊடாக 19ம் நூற்றாண்டின் தத்துவ சிந்தனை மாற்றம் கண்டு கொண்டது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மெய்யியலானது ஹெகலினுடைய கருத்துமுதல் வாத சிந்தனைகளினால் கவரப்பட்டிருந்தது. தொடர்ந்து F.H.பிராட்லி (F.H.Bradley), தோமஸ் ஹில் ஹிரீன் (Thomas Hill Green) போன்றோரும் கருத்துமுதல் வாதத்தினை வளர்த்துச் சென்றனர்.

இத்தகையதொரு சூழ்நிலையில்தான் G.E.மூர் (G.E.Moore) பேர்ட்ரண்ட் ரஸல் (Bertrand Russell) ஆகிய இருவரும் கருத்துமுதல் வாதத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். இவர்களால் முன்னெடுக்கப்பட்ட துறையே பகுப்பாய்வு மெய்யியல். இதனால் மெய்யியலில் பகுப்பாய்வு மெய்யியல் (Analytical Philosophy) கண்ட மெய்யியல் (Continental Philosophy) என்ற வகைப்பாடு தோற்றம் பெற்றது. இதில் கண்ட மெய்யியலாளர்கள் பெரிதும் கருத்துமுதல் வாதத்திற்கு ஆதரவான வகையில் தமது சிந்தனைகளினை வெளிப்படுத்தியிருந்தனர். அது மாத்திரமன்றி கான்டினுடையை அனுபவத்தையும் நியாயித்தலையும் ஒருங்கிணைந்த வகையில் காண்கின்ற அறிவாராட்சியியல் முறையானது ரஸல் போன்ற பிற்பட்ட மெய்யியலாளர்களின் சிந்தனைகளில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. அதிலும் குறிப்பாக கான்ட் 17ம் நூற்றாண்டின் இறுதிவரை அளவையியல் எத்தகைய முன்னேற்றமும் இன்றி விளங்கியிருந்தது என்று சுட்டிக்காட்டியமையே நவீன அளவையியலின் விருத்திக்கு வழி கோலுவதாய் அமைந்தது. இந்த வகையில் கான்டினுடைய சிந்தனைகளை விமர்சிப்பதாயும், ஆதரிப்பதாயும் எழுந்த சிந்தனைகளாக பிற்பட்ட மெய்யியல் வளர்ச்சியடைந்ததெனலாம்.

## 5. விமர்சனத் திறனாய்வு:

மெய்யியல் வரலாற்றில் விமர்சனங்கள் பெறா கொள்கைகளே இல்லை என்று கூறலாம். அந்த வகையில் கான்டின் கொள்கைகளுக்கு எதிராகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அந்த வகையில் ‘நமக்குப் புலப்பதிவுகள் தோன்றுவதற்குரிய காரணம் காணும் வகையில் கடந்த நிலையில் விளங்கும் உலகு ஒன்று இருத்தல் வேண்டும் என்று கான்ட் கொள்வது’ அனுபவவாதிகளால் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது. மேலும் கான்ட் அறிவு மனதிலுள்ள காலம், இடம் என்பனவற்றால் பிரதி செய்யப்படுவதாக குறிப்பிடுவதானது விஞ்ஞானிகளை திருப்தியற்ற நிலைக்கு உள்ளாக்கியது. ஏனெனில் ‘விஞ்ஞானிகள் தாம் பொதுவான அகச்சார்பற்ற நியதிகளையே அறிவதாக கொள்கின்றனர்’.
‘இன்றைய காலங்களில் பிறப்பியல் கூறுகளாலும், தனிநிலை வேறுபாடுகளாலும், சூழ்நிலைக் கூறுகளாலும் மனம் ஆக்கம் கொள்கிறது என்பது வலியுறுத்தப்படுகின்றது. இவ் உண்மையை கான்ட் விடுத்தது அவரது கொள்கையில் பெருங்குறையாக தோன்றுகின்றது’. மேலும் ‘லொக் முதனிலைப் பண்புகள் என்றும், வழிநிலைப் பண்புகள் என்றும் பகுத்தது எவ்வாறு முறையற்றதாக கருதப்படுகின்றதோ அவ்வாறே புலச்சார்புள்ள, புலச்சார்பற்ற தத்துவங்கள் என கான்ட் பகுத்தது முறையற்றது எனக் கொள்வோர் சிலர் உள்ளனர். லொக்கின் கொள்கையைப் பின்பற்றிய பாக்ளி எவ்வாறு அவரது முதனிலைப் பண்புகள், வழிநிலைப் பண்புகள் என்ற பாகுபாட்டை மறுத்தாரோ அவ்வாறு கான்டை பின்பற்றிய சிலர் அவரது புலச்சார்புள்ள, புலச்சார்பற்ற தத்துவங்கள் என்ற பாகுபாட்டை மறுத்தனர்’. இதனால்தான் பேர்ட்டண்ட் ரசல் ‘தற்கால சிந்தனையாளர்களுள் கான்ட் முதன்மையானவர் என்பதனை தன்னால் ஏற்க இயலாது’ என்றார் போலும்.

சமகால மெய்யியலில் கான்டினுடைய சிந்தனைகளை ஆதரிப்பதும் (கண்ட மெய்யியல்), விமர்சிப்பதுமான (பகுப்பாய்வு மெய்யியல்) இருபெரும் தத்துவப் பிரிவுகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த வகையில் முன்னெழுந்த சிந்தனைகளின் சங்கமமாகவும், பின்னெழுந்த சிந்தனைகளின் ஊற்றாகவும் கான்டினது சிந்தனைகள் விளங்கின. இதனாலே தான் ‘இமானுவெல் கான்ட் அவர்களின் தத்துவங்களை அறியாதோர், அவருக்குப் பின்னெழுந்த தத்துவங்களைப் புரிந்து கொள்ள இயலாது’ என்றொரு கருத்து தத்துவ உலகில் நிலவுகின்றது.

## 6. முடிவுரை:

எது எவ்வாறாயினும், கான்டினுடைய சிந்தனைகள் அனுபவவாதம், அறிவுமுதல் வாதம் என்பவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி புதியதொரு முறையினை தத்துவ உலகிற்கு வழங்கியுள்ளது. அது மாத்திரமன்றி அவருக்கு பின் எழுந்த சிந்தனைகளின் விருத்திக்கு கான்டினது சிந்தனைகள் இன்றியமையாததாக இருந்தது என்பதனை எவராலும் மறுக்க முடியாது எனலாம். அத்தோடு கான்டினது சிந்தனைகளைப் புரிந்து கொள்ளாமல் பின்னெழுந்த சிந்தனைகளைப் புரிந்து கொள்ள முடியாது என்பது தத்துவ உலகில் நிலவுகின்ற கருத்தாகும்.

## 7. உசாத்துணைகள்:

Brooke Noel Moore, Kenneth Bruder. (2001), Philosophy – The Power of Ideas. Tata McGraw Hill Publishing Company Limited: New Delhi.

Stumpf Samuel Enoch. (1993), Elements of Philosophy: An introduction. Mc Graw - Hill inc: New York.

Kelly, P.H. (2002), Immanuel Kant, *The Philosophers Magazine.* Retrived from http://www.philosophers.co.uk/cafe/phil_jul2002.htm
Tom Kerns "Introduction to Immanuel Kant"

http://members.pioneer.net/~tkerns/waol-phi-website/lecsite/lec-kant.html

கதிரவேலுப்பிள்ளை, சி. (1958), மேலைநாட்டுத் தர்சன வரலாற்றுச் சுருக்கம். ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்.

நாராயணன், க. (2003), மேலைநாட்டு மெய்ப்பொருள் (சாக்கிரடீசு முதல் சார்த்தர் வரை). மாரி பதிப்பகம்: புதுச்சேரி, இந்தியா.